செய்தி வெளியீடு எண். 27-2016 நாள்: 10.11.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் உள்ள கிராமங்களில் வாரந்தோறும் பிரதி வெள்ளிக்கிழமை அம்மா திட்ட முகாம் சிறப்பாக நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

*****

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த சிறப்புத் திட்டமான "அம்மா திட்ட முகாம்" மக்களைத் தேடி வருவாய்த்துறை என்னும் அம்மா திட்டம் பிரதிவாரம் வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மக்களைத் தேடி அம்மா திட்ட முகாம் என்பதன் அடிப்படையில் மக்கள் சிரமமின்றி, நேரம், செலவு வேலை இழப்பு ஆகியவற்றை போக்குவதற்காக உங்கள் ஊராட்சிக்கே வருவாய்த்துறை மற்றும் இதர துறை அலுவலர்கள் வந்து குறைகேட்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த அற்புதமான திட்டத்தினை பொதுமக்களுக்காக வழங்கி செயல்படுத்தி வருகிறார்கள்.

அம்மா திட்டத்தின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல் (உட்பிரிவு மற்றும் முழு நிலம்), உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், வருவாய் வட்டாட்சியர் அதிகாரத்துக்குட்பட்ட நிலத் தாவாக்கள், முதல் பட்டதாரி சான்றிதழ், விதவைச்சான்றிதழ், குடிநீர், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், சாலை வசதி போன்ற பொதுவான மனுக்களையும் இந்த முகாமில் பொதுமக்கள் மனு அளித்து, பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

வரும் பிரதி வெள்ளிக்கிழமை (11.11.2016) அன்று விழுப்புரம் மாவட்டத்தில் அம்மா திட்ட முகாம் நடைபெறும் இடங்கள் விவரம்: விழுப்புரம் வட்டம் காணை குறுவட்டத்தைச் சேர்ந்த தெளி கிராமம், வானூர் வட்டம் கிளியனூர் குறுவட்டத்தைச் சேர்ந்த ஆதனப்பட்டு கிராமம், விக்கிரவாண்டி வட்டம் அன்னியூர் குறுவட்டத்தைச் சேர்ந்த கடையம் கிராமம்,

திண்டிவனம் வட்டம் ஆவணிப்பூர் குறுவட்டத்தைச் சேர்ந்த கீழ்நெமிலி கிராமம், மரக்காணம் வட்டம் மரக்காணம் குறுவட்டத்தைச் சேர்ந்த கூனிமேடு கிராமம், செஞ்சி வட்டம் மேல்ஒலக்கூர் குறுவட்டத்தைச் சேர்ந்த பென்னகர் கிராமம், மேல்மலையனூர் வட்டம் அவலூர்பேட்டை குறுவட்டத்தைச் சேர்ந்த கோவில்புறையூர் கிராமம், திருக்கோவிலூர் வட்டம் மணலூர்பேட்டை குறுவட்டத்தைச் சேர்ந்த செல்லங்குப்பம் கிராமம், கண்டாச்சிபுரம் வட்டம் அரகண்டலூர் குறுவட்டத்தைச் சேர்ந்த நாயனூர் கிராமம், உளுந்தூர்பேட்டை வட்டம் செங்குறிச்சி குறுவட்டத்தைச் சேர்ந்த ஒடப்பங்குப்பம் கிராமம், கள்ளக்குறிச்சி வட்டம் கள்ளக்குறிச்சி குறுவட்டத்தைச் சேர்ந்த க.மாமனந்தல் கிராமம், சங்காபுரம் வட்டம் வடபொன்பரப்பி குறுவட்டத்தைச் சேர்ந்த பவுஞ்சிப்பட்டு கிராமம், சின்னசேலம் வட்டம் வெள்ளிமலை குறுவட்டத்தைச் சேர்ந்த நாரணம்பட்டு கிராமம் ஆகிய கிராமங்களில் அம்மா திட்ட முகாம் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.